செய்தி வெளியீடு எண். 23/2016 நாள் : 11.06.2016

# விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் காலியாக உள்ள களப்பகுதி வழிநடத்துநர் தற்காலிக பணியிடங்களை பூர்த்தி செய்ய விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன. மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. அவர்கள் தகவல்.

*****

விழுப்புரம் மாவட்டத்தில் தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்கம் செயல்படுத்தப்படும் வட்டாரங்களில் காலியாக உள்ள களப்பகுதி வழிநடத்துநர் பணியிடங்களை மாதம் ரூ.7,500/— ஊதியத்தில் தற்காலிகமாக ஒப்பந்த அடிப்படையில் பணிபுரிந்திட பணியாளர்களை தேர்வு செய்வதற்கான எழுத்து தேர்வு 14.06.2016 அன்று காலை 10:00 மணிக்கு விழுப்புரம் மகளிர் திட்ட அலுவலகத்தில் நடைபெற உள்ளது.

இந்த எழுத்து தேர்வில் பங்குபெற கீழ்க்கண்ட தகுதிகளை கொண்ட விண்ணப்பதாரர்கள் அதற்குரிய விண்ணப்பத்தினை தங்கள் பகுதியைச் சேர்ந்த வட்டார வளர்ச்சி அலுவலகத்தில் பெற்றுக்கொண்டு 13.06.2016 அன்று மாலை 4 மணிக்குள் திட்ட இயக்குநர், மகளிர் திட்டம், தாட்கோ கட்டடம், சென்னை தேசிய நெடுஞ்சாலை, விழுப்புரம். என்ற முகவரிக்கு நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பிட தெரிவிக்கப்படுகிறது.

பனிரெண்டாம் வகுப்பு தேர்ச்சி, பட்டம் பெற்றவர்கள் மற்றும் கணினி அறிவு பெற்றவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். மகளிர் சுயஉதவிக்குழுவில் குறைந்தது 5 ஆண்டுகள் உறுப்பினராக மற்றும் நிர்வாகியாக இருந்திருத்தல் அவசியம். வயதுவரம்பு 21 வயது பூர்த்தியாகி இருக்க வேண்டும் 40 வயதுக்கு மிகாமல் இருத்தல் வேண்டும். மகளிர் திட்ட அலுவலக அறிவுரைப்படி சம்பந்தப்பட்ட வட்டாரத்தில் உள்ள அனைத்து களப்பகுதிகளிலும்/ஊராட்சிகளிலும் பணிபுரிய விருப்பம் உள்ளவராக இருக்க வேண்டும். ஒரு கைபேசி (Cell Phone) வைத்திருக்க வேண்டும், குறுந்தகவல் (SMS) அனுப்ப தெரிந்திருக்க வேண்டும். இரண்டு சக்கர வாகன உரிமம் இருப்பவர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும். இப்பணி முற்றிலும் தற்காலிகமானது என மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.எம்.லக்ஷ்மி,இ.ஆ.ப. தெரிவித்துள்ளார்.

---

செய்தி வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், விழுப்புரம்.